## 2. கவன ஈர்ப்பு

### கோவிலூர் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ்க் கட்டப்படும் 35 மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் ஈர்ப்பார்கள்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கோவிலூர் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்க் கட்டப்படும் 35 மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் கோவிலூர் ஊராட்சியின்பால் அமைநதுள்ள சவ்வாது மலைப்பகுதியில் 27 குடியிருப்புகள் இருக்கின்றன. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், இப்பகுதியில் 35 இடங்களில் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் அமைக்கத் திட்டமிட்டு, அவற்றில் 16 இடங்களில் மும்முனை மின்விசையும் 19 இடங்களில் ஒருமுனை மின்விசையும் தேவைப்படும் எனவும், நீர்த்தொட்டிகள் அமைக்கும் நேரத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் மின்விசை கோரும் விண்ணப்பங்களை அனுப்புவதாகவும தெரிவித்துள்ளனர். இம் மலைபபகுதியில் ஏற்கெனவே 35 இடங்களில் மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு இடங்களில் ரூ 11.5 இலட்சம் செலவில் அண்மையில் மின்மாற்றிகள் நிறுவப்பட்டன. எனவே, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்பட்டு மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்குத் தேவையான மின்விசையை வழங்கும்.

1999 ஏப்ரல் 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

2. தற்சமயம் சவ்வாது மலைப்பகுதிக்கு ஆலங்காயம் துணை மின் நிலையத்திலிருந்து 11 கிலோ வோல்ட் மின்பாதை மூலம் மின்விசை வழங்கப்படுகிறது. இத்துணை மின் நிலையத்திலிருந்து சற்று அதிக தூரத்தில் சவ்வாது மலைப்பகுதி அமைந்துள்ளபடியால், சில நேரங்களில் மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. இக்குறையைக் களைவதற்காக சவ்வாது மலைக்கு அருகில் இருக்கும் காவலூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் நிறுவி, அதிலிருந்து சவ்வாது மலைப்பகுதிக்கு மின்விசை வழங்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு வருகிறது இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், சவ்வாது மலைப் பகுதியில் மின்விசை வழங்குவது வெகுவாகச் சீரடையும்.

3. பொதுவாகவே, குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் முன்னுரிமை அடிப்படையில் மின்விசை வழங்கி வருகிறது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை நான் படித்தேன். நான் ஏற்கெனவே கேள்வியில் சொல்லியதுபோல், அந்த ஜவ்வாது மலைப்பகுதியில் 1971 ஆம் ஆண்டுதான், நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் அப்பகுதி மக்கள் மின்சாரத்தைப் பார்த்தார்கள். அதற்குப் பிறகு மின்சார வாரியத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தாலே, மின் அழுத்தம் இல்லாமல் இன்றையதினம் தெருவிளக்கும் எரிவதில்லை. அதே நேரத்திலே, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகியும், நம்முடைய அந்த மலைவாழ் மக்கள் இன்னும் ஓடையில்தான் தண்ணீர் குடிக்கின்ற ஓர் அவல நிலை இருக்கின்றது. அதைப் போக்குகின்ற வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இன்றையதினம் அந்தக் கோவிலூர் ஊராட்சியில்— ஒரே ஊராட்சியில்-42 கிராமங்கள் உள்ளன. அதிலே 35 இடங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. அதிலே மின்விசை கிடைக்காது என்கிற ஒரு நிலை இருந்தது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், காவலூரியிலேயிருந்து தற்சமயம் இங்கே துணை மின் நிலையம் அமைத்து, இதற்கு மின்சாரம் தருவோம் என்று சொல்கிறார்கள். காவலூர் என்பது வேலூர் மாவட்டத்திலே வாணியம்பாடி தொகுதியிலே வருகிறது. எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்திலே அமைக்கப்படவுள்ளதை

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1999 ஏப்ரல் 28

ஜமுனாமருத்தூர் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைத்து இந்தக் குறைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாக ஒரு கோரிக்கை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜமுனாமருத்தூரிலே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பிரச்சினையில் உடனடியாக மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காக, காவலூர் பகுதியிலே ஒரு துணை மின் நிலையத்தை அமைப்பது என்று முடிவெடுத்து, அதற்கான திட்டம் தயாரித்து இந்த ஆண்டு அங்கே ஒரு துணை மின் நிலையம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, இந்த மாதம் மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களும், நானும் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில இந்தப் பிரச்சினையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தப் பரிந்துரையை ஏற்று அதிகாரிகளிடத்திலே கலந்து பேசினோம். மாண்புமிகு உறுப்பினர் மகிழத்தக்க வகையில் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய இடத்திலேயும் ஒரு துணை மின்நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த மலைவாழ் மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. மன்னார்குடி தொகுதியில் இடி, மின்னல் தாக்கி பலியானவர்களுக்கு முதல்வர் நிதி உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதியில்